RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025





சிவகங்கை | மலர்-4 | இதழ்-68 | 13 மார்ச் | வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## "போர் நிறுத்தத்துக்கு உக்ரைன் தயார்; புதினும் சம்மதிப்பார்" டொனால்ட் ட்ரம்ப் தகவல்

வாஷிங்டன், மார்ச்.13

"தற்காலிக போர் நிறுத்தத்துக்கு உக்ரைன் தயாராக உள்ளது. ரஷ்ய அதிபர் புதினும் இதற்கு சம்மதிப்பார் என நம்புகிறேன்" என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.



சவுதி அரேபியாவின் ஜெட்டா நகரில் அமெரிக்கப் பிரதிநிதிகளுடன் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி ஆலோசனை மேற்கொண்டார். இந்தப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் உக்ரைன் அரசு 30 நாட்கள் போர் நிறுத்தத்துக்கு தயாராக இருப்பதாகக் கூறியது. இதனைத் தொடர்ந்தே ட்ரம்ப்பின் அறிக்கையும் வெளியாகியுள்ளது.

இந்தப் போர் நிறுத்தம் தொடர்பாக ட்ரம்ப் கூறும்போது, "ரஷ்யா உக்ரைன் இடையே கடந்த மூன்று ஆண்டுகளாக நடைபெறும் போரின் காரணமாக இரு தரப்பிலும் ராணுவ வீரர்கள், பொதுமக்கள் என உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளது. இது நிறுத்தப்பட வேண்டும். அதற்கு தற்காலிக போர் நிறுத்தம் மிகவும் அவசியம்.

இந்த போர் நிறுத்தத்துக்கு உக்ரைன் ஒப்புக் கொண்டுள்ளது. ரஷ்யாவும் ஒப்புக்கொள்ளும் என்று நான் நம்புகிறேன். இந்த போர் நிறுத்த அவசியத்தை உணர்ந்து ரஷ்யா அதனை ஏற்கும்படி நம்மால் செய்ய முடிந்தால் அது மிகப்பெரிய விஷயம். ஒருவேளை அப்படிச் செய்ய முடியாமல் போனால், இன்னும் நிறைய மக்கள் கொல்லப்படுவார்கள்" கூறியுள்ளார்.

மூன்று ஆண்டுகளாக நீடிக்கும் போரை நிறுத்துவது தொடர்பாக ரஷ்யாவுடன் உடனடியாக பேச்சுவார்த்தை மேற்கொள்ள தயாராக இருப்பதாக உக்ரைன் தெரிவித்துள்ளது கவனிக்கத்தக்கது.

இந்தப் பேச்சுவார்த்தை பற்றி அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ கூறும்போது, "இன்று நாங்கள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை எட்டுவதற்கான உடனடி அமைதிப் பேச்சுவார்த்தையில் பங்கேற்கும்படி உக்ரைனை சம்மதிக்க வைத்துள்ளோம்" என்று ஊடகங்களிடன் கூறினார்.

மேலும் எக்ஸ் பக்கத்தில் இது பற்றி குறிப்பிடும்போது, "உக்ரைனின் இந்த தயார் நிலை, போர் நிறுத்தத்துக்கான விருப்பம் நீடித்த அமைதிக்கு அருகில் எடுத்துவைக்கப்பட்டுள்ள அடியாகும். அமெரிக்க அதிபரின் தலைமையில், சவுதி அரேபிய இளவரசர் முகமது பின் சல்மானின் உதவியாலும் உக்ரைன் அமைதியை மீட்டெடுக்கும் சூழல் உருவாகியுள்ளது. இப்போது எல்லாம் ரஷ்யாவின் கைகளில்தான் உள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இது மட்டுமல்லாது போர் நிறுத்தத்துக்கு தயார் என்று கூறியுள்ளதால் உக்ரைனுக்கு நிறுத்தி வைத்திருந்த உளவுத் தகவல் பகிர்தல் சேவை, பாதுகாப்பு சேவை ஆகியனவற்றை மீண்டும் வழங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

## பாகிஸ்தான் ரயில் கடத்தல்: 16 தீவிரவாதிகள் சுட்டுக் கொலை; 104 பிணைக் கைதிகள் பத்திரமாக மீட்பு

இஸ்லாமாபாத், மார்ச்.13

உலகையே உலுக்கிய பாகிஸ்தான் ரயில் கடத்தல் சம்பவத்தில் தற்போதைய நிலவரப்படி 16 தீவிரவாதிகள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளனர், 104 பிணைக் கைதிகள் மீட்கப்பட்டுள்ளனர்.




பாகிஸ்தானில் பயணிகள் ரயிலை தீவிரவாதிகள் நேற்று (மார்ச் 11) சிறைபிடித்தது. அதில் பயணம் செய்த 30 பாதுகாப்புபடை வீரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். 500க்கும் மேற்பட்ட பயணிகள், பிணைக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர். உலகளவில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்திய இந்தச் சம்பவத்தில் தற்போதைய நிலவரப்படி 16 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். 104 பிணைக் கைதிகள் மீட்கப்பட்டுள்ளனர். எஞ்சிய பயணிகளை மீட்கும் வகையில் தீவிரவாதிகளுடன் பாதுகாப்புப் படையினர் கடுமையான துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தீவிரவாதிகளை வீழ்த்தும் பணி தொடரும், அனைத்து பிணைக்கைதிகளும் பத்திரமாக மீட்கப்படுவார்கள் என்று ராணுவம் தெரிவித்துள்ளது. மீட்கப்பட்ட பயணிகளில் 58 பேர் ஆண்கள், 31 பேர் பெண்கள், 15 பேர் குழந்தைகளாவர். அவர்கள் அனைவரும் இன்னொரு ரயில் மூலம் பாலோசிஸ்தான் மாகாணத்தின் கச்சி மாவட்டத்தில் உள்ள மாக் நகருக்கு பத்திரமாக அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நடந்தது என்ன? பாகிஸ்தானின் குவெட்டா நகரில் இருந்து பெஷாவர் நகருக்கு நேற்று காலை ஜாபர் எக்ஸ்பிரஸ் பயணிகள் ரயில் புறப்பட்டது. இந்த ரயில் பலுசிஸ்தான் மாகாணம், முஷ்கப் பகுதி சுரங்கப் பாதையில் வந்தபோது தண்டவாளம் வெடிவைத்து தகர்க்கப்பட்டது. இதன் காரணமாக ஜாபர் எக்ஸ்பிரஸ் ரயில் தடம் புரண்டது.

அப்போது பலுச் விடுதலை படையை சேர்ந்தவர்கள், ஜாபர் எக்ஸ்பிரஸ் ரயிலை சிறைபிடித்தனர். ரயிலின் குறிப்பிட்ட பெட்டிகளில் பாகிஸ்தான் பாதுகாப்பு படை வீரர்கள் பயணம் செய்தனர். அவர்களுக்கும் கிளர்ச்சிப் படையினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை மூண்டது. இதில் 30 பாகிஸ்தான் வீரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். 500க்கும் மேற்பட்ட பயணிகள், பிணைக்கைதிகளாக பிடிக்கப்பட்டனர்.

இதுவரை 104 பயணிகள் மீட்கப்பட்டுள்ள நிலையில், இன்னும் எத்தனை பயணிகள் ரயிலில் பிணைக் கைதிகளாக இருக்கின்றனர் என்ற சரியான தகவல் தெரியவில்லை. ஏனெனில் ரயிலில் இருந்து சில பயணிகள் இறங்கி இருள் என்று கூட பார்க்காமல் மலைகளுக்கு இடையே ஒளிந்தனர் என்று சொல்லப்படுகிறது. அதேபோல் 35 பயணிகளை தீவிரவாதிகள் ரயிலில் இருந்து கடத்திச் சென்றதாகவும், ஆனால் அவர்கள் உயிருடன் இருப்பதாகவும் உள்ளூர் காவல்துறை தெரிவித்துள்ளது.

## போக்குவரத்து கழகங்களுக்கு 19 விருதுகள் அமைச்சர் சிவசங்கர் பாராட்டு

சென்னை, மார்ச்.13

போக்குவரத்துக் கழகங்கள் 19 விருதுகள் பெறும் வகையில் பணியாற்றியமைக்காக பணியாளர்களை துறையின் அமைச்சர் சா.சி.சிவசங்கர் பாராட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கை: அனைத்து இந்திய மாநில சாலை போக்குவரத்துக் கழகங்கள் கூட்டமைப்பின் விருதை தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்கள் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து பெற்று வருகின்றன.

அந்த வகையில் கடந்த 202324ம் ஆண்டுக்கான விருதுகளில் 19 விருதுகள் தமிழக அரசு போக்குவரத்து கழகங்களுக்கு அறிவிக்கப்பட்டது.

இந்த விருதுகளை டெல்லியில் கடந்த 7ம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் ஆளுநர் கிரண்பேடியிடம் இருந்து சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் கழக தலைமை அதிகாரிகள் பெற்றுக் கொண்டனர்.

போக்குவரத்துக் கழகங்கள் 19 விருதுகள் பெறும் வகையில், தேவையான கட்டமைப்பை ஏற்படுத்தித் தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோருக்கு நன்றி. சிறப்பாக பணியாற்றிய ஒட்டுநர்கள், நடத்துநர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள், அலுவலர்கள் மற்றும் அனைத்து பணியாளர்களுக்கு பாராட்டையும், நன்றியையும் தெரிவிக்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மானாமதுரை மற்றும் இளையான்குடி கர்ப்பிணி பெண்களுக்கு முன்னாள் அமைச்சர் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ. தமிழரசி ரவிகுமார் முன்னிலையில் சமுதாய வளைகாப்பு நேற்று நிகழ்ச்சி நடைபெற்றது இந்நிகழ்வில் கர்ப்பிணி பெண்களுக்கு பல்வேறு கருத்துக்களை வழங்கி எதிர்கால சந்ததியினரை சிறப்பான முறையில் வார்த்தெடுத்து வளர்க்க வேண்டும் என கூறினார்.இந்நிகழ்வில் திமுக நகரக் கழகச் செயலாளர் பொன்னுச்சாமி , கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் துரை. ராஜா மணி ,மேற்கு ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை , மானாமதுரை முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் லதா அண்ணாதுரை, மானாமதுரை நகர் மன்ற துணைத் தலைவர் பாலசுந்தரம் , ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர்கள் அங்கன்வாடி பணியாளர்கள் வட்டார மருத்துவர்கள் பொதுமக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை இரயில்வே காலனி ஜீவா நகரை சேர்ந்த சார்பு ஆய்வாளர் முத்துகிருஷ்ணன் திடீர் உடல் நலக்குறைவால் உயிரிழந்தார்.அவரது பூதஉடலுக்கு சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத், மானாமதுரை துணை கண்காணிப்பாளர் நிரேஷ் , மானாமதுரை காவல் ஆய்வாளர் ரவீந்திரன் ஆகியோர் மலர் வளையம் வைத்து அரசு சார்பில் அஞ்சலி செலுத்தினர்.பின்னர் ஆயுதப்படை காவல் சார்பு ஆய்வாளர் சுந்தரபாண்டியன் தலைமையிலான காவலர்கள் 21 குண்டுகள் விண்ணில் முழங்க அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## மகளிர் உதவித் தொகை ரூ.1000ல் இருந்து ரூ.2500 ஆக உயர்வு புதுச்சேரி பட்ஜெட் முக்கிய அம்சங்கள்

புதுச்சேரி, மார்ச்.13

புதுச்சேரியில் 21 முதல் 55 வயது வரை அரசின் எவ்வித மாதாந்திர உதவித் தொகை பெறாத ஏழை குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 தரப்படுகிறது. இந்த நிதியாண்டு முதல் இந்த உதவித் தொகை ரூ.2,500 ஆக உயர்த்தி தரப்படும் என்று முதல்வர் ரங்கசாமி அறிவித்துள்ளார்.



புதுச்சேரி சட்டப்பேரவையில் நிதித்துறை பொறுப்பு வகிக்கும் முதல்வர் ரங்கசாமி பட்ஜெட்டை தாக்கல் செய்தார். அதில் 2025 26 நிதியாண்டு பட்ஜெட் திட்ட மதிப்பீடு ரூ.13,600 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பட்ஜெட்டில் முக்கிய அம்சங்கள் விவரம்: › தென்னை சாகுபடி விவசாயிகளுக்கு இந்த ஆண்டு முதல் வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீடு அறிமுகப்படுத்தப்படும். விவசாய தொழிலாளர் நலச்சங்கத்தில் பதிவு செய்துள்ள அனைத்து விவசாயத் தொழிலாளர்களுக்கும் மழைக்கால நிவாரணமாக ஆண்டுக்கு ரூ.2,000 வரும் நிதியாண்டு முதல் தரப்படும். வனமில்லா பகுதிகளில் 3 லட்சம் மரக்கன்றுகள் நடப்படும்.

கடந்த 2015 முதல் 2021 வரையிலான ஆண்டுகளுக்கான தமிழ்மாமணி விருதுகள் வழங்கப்படும். புதிதாக சொற்பொழிவாளர், புகைப்படம், திரைப்படம், ஆவணப்படம் ஆகியத் துறைகளுக்கும் கலைமாமணி விருது வரும் நிதியாண்டு முதல் தரப்படும். காரைக்கால் அம்மையார் பெயரில் விருது வழங்க உத்தேசித்துள்ளோம்.

பாவேந்தர் பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகம் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகள் நடக்கவுள்ளது. வரும் நிதியாண்டு முதல் ரேஷன் அட்டைத்தாரர்களுக்கு இலவச அரிசியோடு 2 கிலோ கோதுமை இலவசமாக தரப்படும்.

பாண்லேயில் ஐஸ்கிரிம் தயாரிக்கும் பிரிவு நிறுவப்படவுள்ளது.

› மதிய உணவுத்திட்டத்தில் வாரம் 3 நாட்களுக்கு தரப்படும் முட்டை வரும் கல்வியாண்டு முதல் அனைத்து பள்ளி நாட்களிலும் தரப்படும்.

› பெருந்தலைவர் காமராஜர் நிதி உதவித் திட்டத்தின் கீழ், சென்டாக் மூலம் தேர்வாகும் மருத்துவம், பொறியியல், செவிலியர் பாடப்பிரிவுகளில் சேர்வோருக்கு நிதி உதவி தரப்படுகிறது. வரும் கல்வியாண்டு முதல் அரசு ஒதுக்கீட்டில் சென்டாக் மூலம் சேர்க்கை பெறும் அனைத்து பாடப்பிரிவுகளுக்கும் நிதியுதவி விரிவுப்படுத்தப்படும்.

› வருவாய்த்துறை, உள்துறை, கல்வித்துறை, வேளாண்துறை, சுகாதாரத்துறை, மின்துறை கலை பண்பாட்டுத் துறை ஆகியவற்றில் 229 பணியிடங்கள் நடப்பு நிதியாண்டில் நிரப்பப்படும். இவ்வாறு பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மறுசீரமைப்புக்கு எதிராக ஆதரவு திரட்டும் திமுக அரசு ஏழு மாநிலங்களுக்கு பறக்கும் ஸ்டாலின் படை!

சென்னை, மார்ச்.13

மக்களவைத் தொகுதி மறுசீரமைப்புக்கு எதிராக சென்னையில் நடைபெற உள்ள ஆலோசனைக் கூட்டத்தில் ஒடிசா முன்னாள் முதல்வர் நவீன் பட்நாயக் கலந்துகொள்ள உள்ளார்.

2026ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டை நடத்தி அதன் அடிப்படையில் மக்களவை தொகுதி மறுசீரமைப்பு செய்யும் போது மக்கள் தொகையை குறைத்த மாநிலங்கள் தங்கள் பிரதிநிதித்துவத்தை இழக்க நேரிடும். எனவே 1971 மக்கள் தொகை கணக்கீட்டின் படி தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும், அல்லது மேலும் முப்பது ஆண்டுகளுக்கு மாற்றமின்றி தொடர வேண்டும் என்று தமிழ்நாடு அரசு வலியுறுத்தி வருகிறது.

தமிழ்நாடு போலவே மத்திய அரசின் கோரிக்கையை ஏற்று மக்கள் தொகையை கட்டுப்படுத்திய பல மாநிலங்கள் தங்கள் பிரதிநிதித்துவத்தை இழக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே முதல்வர் ஸ்டாலின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுக்களை அமைத்து பிற மாநிலங்களுக்கும் சென்று முதல்வர்கள், முக்கிய கட்சிகளின் தலைவர்களை சந்திக்க திட்டமிட்டார்.

பாதிப்புக்கு உள்ளாகும் கேரளா, ஆந்திரம், தெலங்கானா, கர்நாடகம், மேற்கு வங்கம், ஒடிசா, பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களுக்கு செல்ல திட்டமிடப்பட்டது.

மார்ச் 22ஆம் தேதி மேற்குறிப்பிட்ட மாநிலங்களின் முதல்வர்கள், முக்கிய கட்சிகளின் தலைவர்களை சென்னைக்கு அழைத்து இது தொடர்பாக ஆலோசனை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் தொழில் துறை அமைச்சர் டிஆர்பி ராஜா, மக்களவை உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் ஒடிசா சென்று முன்னாள் முதல்வர் நவீன் பட்நாயக்கை சந்தித்து பேசினர். அப்போது 22ஆம் தேதி சென்னையில் நடைபெறும் கூட்டத்துக்கு வருவதாக சம்மதம் தெரிவித்துள்ளார்.

நாளை மறுநாள் மார்ச் 13ஆம் தேதி நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் என்.ஆர்.இளங்கோ ஆகியோர் தெலங்கானா செல்கின்றனர். அங்கு தெலங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி மற்றும் கிமிவி மிவி கட்சியின் தலைவர் அசாதுதீன் ஒவைசி உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்திக்க உள்ளனர்.மாநிலங்களவை உறுப்பினர் அப்துல்லா மற்றும் வனத்துறை அமைச்சர் பொன்முடி ஆகியோர் கர்நாடகா செல்கின்றனர். கர்நாடக முதல்வர் சித்தராமையா, துணை முதல்வர் டி.கே.சிவகுமார் மற்றும் பிற தலைவர்களை சந்திக்கின்றனர்.

திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி , நிதியமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, அம்மாநில மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் முகமது சாலி, ஆகியோரை சந்திக்க உள்ளனர்.

தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் பி.டி.ஆர். தியாகராஜன் மற்றும் தென் சென்னை மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் கேரளா சென்று முதல்வர் பினராயி விஜயன் மற்றும் பிற தலைவர்களை சந்திக்க உள்ளனர்.

சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி சோமு ஆகியோர் ஆம் ஆத்மி ஆட்சி செய்யும் பஞ்சாப் மாநிலம் செல்ல உள்ளனர்.

ஆந்திர பிரதேசம்

பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் ஆகியோர் ஆந்திரப் பிரதேச முதல்வர் சந்திரபாபு நாயுடு மற்றும் பிற தலைவர்களைச் சந்திக்க உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தேனம்மை ஊரணி அருள்மிகு ஸ்ரீ தர்ம முனீஸ்வரர், ஸ்ரீ மகா காளியம்மன், ஸ்ரீ தத்தாத்திரேயர் திருக்கோவிலில் ‘‘மாசி மகம்‘‘ முன்னிட்டு 33 ஆம் ஆண்டு ‘‘அன்னதானம்‘‘ காலையில் சிறப்பு அபிஷேகமும், மகா தீபாரதனைகளும் மற்றும் அதனைத் தொடர்ந்து அன்னதானம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பக்தர்கள் கலந்து கொண்டனர்..

## வரதராஜபுரத்தில் எஸ்.எஸ்.பி வித்யாஷ்ராம் பள்ளி ஆண்டு விழா




வரதராஜபுரம் மார்ச் 13

வரதராஜபுரத்தில் எஸ்.எஸ்.பி வித்யாஷ்ராம் பள்ளியில் 1ஆம் ஆண்டு விழா வெகு சிறப்பாக நடைப்பெற்றது.

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் ஒன்றிய வரதராஜபுரத்தில் எஸ்.எஸ்.பி வித்யாஷ்ராம் பள்ளியில் 1ஆம் ஆண்டு தொடக்க விழா வெகு சிறப்பாக எஸ்.எஸ்.பி பள்ளி வளாகத்தில் நடைப்பெற்றது நிகழ்ச்சிக்கு எஸ்.எஸ்.பி பள்ளியில் நிறுவனத் தலைவர் ராஜா பக்கிரி சாமி தலைமை தாங்கினார், தலைமை ஆசிரியர் ஜி.பிரியா முன்னிலை வகித்தனர், துணை ஆசிரியர் பிரஜித்ரா சண்முகம் அனைவரையும் வரவேற்றார்.

இந்த நிகழ்ச்சியின் தொடக்கமாக 1ஆம் ஆண்டு தொடக்க விழாவில் சிறப்பு அழைப்பாளராக நகைச்சுவை தென்றல் ஆர்.சண்முக வடிவேல், ஆடிட்டர் ராஜசேகரன், கார்டியல் பைனான்ஸ் டைரக்டர் எம்.கே. சந்திரசேகர், தலைமை ஆசிரியர் ஜி.பிரியா ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தனர்

இந்த நிகழ்ச்சியில் பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்டு ஆர்வத்துடன் கலந்து கொண்டு பரதநாட்டியம் ஆடல் பாடல் நடனமாடி பொதுமக்கள் உற்சாகமாக கண்டு களித்தனர்

அதனைத் தொடர்ந்து பள்ளி மாணவ மாணவிகள் பெற்றோர்கள் ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

நகைச்சுவை தென்றல் ஆர்.சண்முகா வடிவேல் பேசுகையில் எஸ்.எஸ்.பி பள்ளியில் மாணவ மாணவிகள் அனுப்பி வைத்து பெற்றவர்கள் சந்தோஷமாக இருக்க வேண்டும் இந்த பள்ளியில் படித்தால் ஒழுக்கத்தையும் குணத்தையும் கற்றுக் கொள்ள முடியும் இந்தப் பள்ளியில் ஆசிரியர்களுக்கு பெருமைப்பட வேண்டும் சிறந்த பள்ளிக் கூடமாக உருவாக்கப்பட இந்த பள்ளிக்கூடம் அனைத்தையும் உருவாக்கித் தந்த அவரைப் நிறுவன தலைவரை பாராட்ட வேண்டும் என்று அவர் கூறினார்..

## குன்னூரில் நூற்றாண்டு கால பழமை வாய்ந்த மணிக்கூண்டுபொலிவு படுத்தும் பணி தீவிரம்

குன்னூர், மார்ச்13

நீலகிரி மாவட்டம் குன்னூர் பஸ் நிலையத்தில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் போது மணிக்கூண்டு அமைக்கப்பட்டது. குன்னூரில் மட்டுமே மாவட்டத்தில் மணிக்கூண்டு உள்ளது. கடந்த காலங்களில் ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை அலாரம் அடிக்கும் வகையில் இந்த கடிகாரம் செயல்பட்டு வந்த நிலையில் நாளடைவில் எந்த விதமான சத்தமும் வெளியே வருவதில்லை. தற்போது பஸ் நிலைய விரிவாக்க பணிகள் நடந்து வருவதால்இந்த மணிக்கூண்டை பராமரிக்கும் நகராட்சி நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.




சுற்றுலா நகரமான குன்னூரில் இது போன்ற மணிக்கூண்டை பார்த்து வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அதிசயத்து வரும் நிலையில் பஸ் நிலைய விரிவாக்கம் காரணமாக மணிகூண்டை பொலிவு படுத்தும்பணி நடந்து வருவதால் உள்ளூர்வாசிகள், சுற்றுலா பயணிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## தேவகோட்டை மாசி மாத வளர்பிறை ரதோஷத்தையொட்டி நந்தி பெருமானுக்கு சிறப்பு அபிஷேகம் தீபாராதனை



தேவகோட்டை மார்ச் 13

தேவகோட்டை நகர சிவன் கோவிலில் மாசி மாத வளர்பிறை பிரதோஷத்தையொட்டி நந்தி பெருமானுக்கு சிறப்பு அபிஷேகம் தீபாராதனை நடை பெற்றது

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சிவன் கோயிலில் மாசி மாதத்தில் வரும் வளர் பிறை பிரதோஷத்தில் நந்தீ ஸ்வரரை வழிபட்டால் மகிழ்ச்சி, செழிப்பும் பெருகும் என்ற ஐதீகத்தால், சிவன் கோவிலில் ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

மாசி மாத வளர்பிறை பிரதோஷத்தை முன்னிட்டு கோவிலில் உள்ள நந்திகேஸ்வரருக்கு மஞ்சள், சந்தனம்,பால், தயிர், தேன்,பஞ் சாமிர்தம் இளநீர்,பன்னீர் நெய் உள்ளிட்ட ஒன்பது வகையான திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு பின்னர் சிறப்பு அலங்கார மகா தீபாராதனை காட்டப்பட்டது. மூலவர் சிறப்பு அலங்காரத்தில் அருள்பாலித்தார். அலங்கரிப்பட்ட உற்சவர் ரிஷப வாகனத்தில் எழுந்தருளி கோவிலின் உள் பிரகாரத்தில் மூன்று முறை வலம் வரும் நிகழ்ச்சி நடந்தது மாசி மாத வளர்பிறை பிரதோஷத்தில் நந்தீஸ்வரரை வழிபட்டால் வாழ்வில் மகிழ்ச்சி , சந்தோஷம் நன்மைகள் பெற வேண்டி தேவகோட்டை மற்றும் சுற்றுப்புற பகுதியைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர் தொடர்ந்து அனைவருக்கும் கோயில் நிர்வாகத்தின் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது..

## கல்லல் முருகப்பா மேல்நிலைப்பள்ளி ஆசிரியருக்கு அண்ணா விருது

சிவகங்கை மார்ச் 13

சிவகங்கை மாவட்டம் கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியை சேர்ந்த பட்டதாரி ஆசிரியர் பிரபுவுக்கு ‘‘அண்ணா விருது’’ வழங்கப்பட்டது.

கோயமுத்தூரில் செயல்பட்டு வரும் மக்கள் உரிமைகள் சமூக சேவை இயக்கம் மற்றும் மகளிர் சட்ட உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் பல்வேறு துறைகளில் முத்திரை பதிப்பவர்களுக்கு பல விருதுகளை வழங்கி கௌரவித்து அவர்களை பாராட்டி வருகிறது.

கோயம்புத்தூர் பீளமேடு கிளஸ்டர்ஸ் மீடியா கல்லூரியில் அந்த அமைப்பின் சார்பாக ஆறாவது விருது வழங்கும் நிகழ்வு மார்ச் 9 ஆம் நாள் நடைபெற்றது. இதில் பல்வேறு சாதனைகளைப் புரிந்து வேர்ல்ட் ஆப் கின்னஸ் ரெக்கார்டு புத்தகத்தில் இடம் பெற உள்ளவர்களுக்கும், பல்வேறு துறைகளில் சிறப்பாக செயல்பட்டவர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

ஆசிரியர் பிரபு கடந்த ஒரு வருடத்தில் மட்டும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக நடைபெற்ற குழந்தைகள்






அறிவியல் மாநாட்டில் 41 ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பித்து மாவட்ட, மண்டல அளவில் தேர்வாகி மாநில அளவிலான போட்டியில் பங்கேற்க வைத்து 82 மாணவ மாணவிகளை ‘‘குழந்தை விஞ்ஞானிகளாக’’ உருவாக்க காரணமாக இருந்ததார். மேலும், பல்வேறு அறிவியல் கண்காட்சி நிகழ்ச்சிகளில் தன் பள்ளியிலிருந்து

40 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளை பங்கேற்க வைத்தார். பள்ளிக்கல்வித்துறை சார்பாக தமிழ்நாடு முழுவதும் இந்த கல்வி யாண்டில் நடத்தப்பட்ட ஆசிரியர்களுக்கான அறிவியல் கண்காட்சி போட்டியில் வட்டார மற்றும் மாவட்ட அளவில் இவர் பங்கு பெற்றார். சிவகங்கை புத்தகத் திருவிழாவில் தன்னார் வத்துடன் பணியாற்றுவது, ரத்ததான முகாம் நடத்துவது, ரத்த தானம் செய்வது, மரக்கன்றுகள் நடுவது உள்ளிட்ட இவரது சமூகப் பணிகளையும், எழுத்தாளராக பரிணமிக்கும் இவர் கடந்த ஒன்றரை வருட காலத்தில் 7 நூல்களை எழுதி சாதனை படைத்துள்ளதையும் கருத்தில் கொண்டு இவருக்கு அண்ணா விருது வழங்கப்பட்டது. கிராமப்புற மாணவ மாணவிகளையும் விஞ்ஞானிகளாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் ஆசிரியர்களின் துணையுடன் 63 மாணவமாணவிகளை கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கும் இவர் அழைத்துச் சென்று வந்தது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய சாதனைகளை செய்த ஆசிரியர் பிரபுவுக்கு ‘‘ தேசத்தின் அடையாளம் அண்ணா விருது ‘‘ நிர்வாகிகள் முனைவர் சுரேஷ், முனைவர் லிவிங்டன் தாஸ், சைமூர் நடேசன், விவின் கிங்ஸ்லி ரிச்சர்ட் ஆகியோர் முன்னிலையில் கோவை விழாவில் வழங்கப்பட்டது.

## சிவகங்கையில் கடன் முகாமில், 81 மாணாக்கர்களுக்கு ரூ.3.07 கோடி மதிப்பீட்டிலான கல்வி கடனுதவிக்கான ஆணைகளை வழங்கிய கூட்டுறவுத்துறை அமைச்சர்

சிவகங்கை மார்ச் 13

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மருதுபாண்டியர் நகர், அரசு மேல்நிலைப்பள்ளி கலையரங்கத்தில் கடந்த 11 ஆம் தேதி மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி சார்பில் கல்லூரி மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் நடைபெற்ற மாபெரும் சிறப்பு கல்வி கடன் முகாமில், மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.தமிழரசி ரவிக்குமார் (மானாமதுரை) மற்றும் எஸ்.மாங்குடி (காரைக்குடி) ஆகியோர் முன்னிலையில், கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் மாணாக்கர்களுக்கு கல்வி கடனுதவிக்கான ஆணைகளை வழங்கி தெரிவிக்கையில்,




தமிழ்நாடு முதலமைச்சர் அழியா செல்வமான கல்வியை மாணவர்கள் நிரம்பபெற்றிடும் வகையில், கல்விக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களை தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தி, கல்வி வளர்ச்சி நிறைந்த மாநிலமாக தமிழகம் சிறந்து விளங்கி வருகிறது. அந்த வகையில், பள்ளிக் கல்வித்துறைக்கு 40 ஆயிரம் கோடி மதிப்பீட்டிலும், உயர்கல்வித்துறைக்கு 07 ஆயிரம் கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் 47 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்து, ஒவ்வொரு மாணவர்களின் பெற்றோரின் நிலையிலிருந்து, மாணவர்கள் கல்வி கற்பதற்கான அனைத்தையும் செய்து வருகிறார்கள்.

குறிப்பாக, அரசு பள்ளியில் பயின்று பட்டப்படிப்பு, பட்டயப் படிப்பு பயில்கின்ற மாணவ மாணவியர்களுக்கு மாதந் தோறும் ரூ.1,000/ ஊக்கத் தொகையாக வழங்கிடும் பொருட்டு, புதுமைப்பெண் திட்டமும், தமிழ்ப் புதல்வன் திட்டமும் சிறப்பாக செயல் படுத்தப்பட்டு, மாணாக்கர் களிடையே உயர்கல்வி கற்பதற் கான ஆர்வத்தினை ஏற்படுத்தி யுள்ளது.

மேலும், உயர்கல்வி கற்பதற்கு தடையாக இருந்துவிடக்கூடாது என்பதற்காக, சிறப்பு கல்விக்கடன் முகாம்களும் நடத்தி அதன் வாயிலாக மாணவர்கள் பயன்பெறுகின்ற வகையிலும் தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி, தமிழகம் முழுவதும் மாபெரும் சிறப்பு கல்விக்கடன் முகாம்களும் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் கல்லூரி பயிலும் மாணாக்கர்களுக்கு பயனுள்ள வகையில், மாவட்ட அளவில் சிறப்பு கல்வி கடன் முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டு, இன்றைய தினம் சிவகங்கையில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கியின் சார்பில், சிறப்பு கல்வி கடன் முகாம் நடைபெறுகிறது.

இம்முகாமினை முன்னிட்டு நாளாது தேதி வரை விண்ணப் பித்த மாணாக்கர்களுக்கு, அந்தந்த வங்கிகளினால் அனுமதிக்கப்பட்டு, அதன்படி இன்றைய தினம் மொத்தம் 81 மாணாக்கர்களுக்கு ரூ.3.07 கோடி மதிப்பீட்டிலான கல்வி கடன் ஆணைகள் வழங்கப்படுகிறது.

இன்றைய தினம் நடைபெற்ற இம்முகாமில் கலந்து கொண்ட மாணாக்கர்கள் புதிய கல்வி கடனுதவிகள் பெறுவதற்கும், விண்ணப்பங்களை வங்கி அலுவலர்களிடம் சமர்ப்பித்துள்ளனர். தகுதியான மாணாக்கர்களுக்கு கடன் அனுமதி உத்தரவுகளை விரைவில் கிடைக்கப்பெற செய்வதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. முன்னதாக, கடந்த 2021 22 ஆம் நிதியாண்டில் 932 மாணாக்கர்களுக்கு ரூ.22.3 கோடி மதிப்பீட்டிலும், 2022 23 ஆம் நிதியாண்டில் 1,140 மாணாக்கர்களுக்கு ரூ.22.83 கோடி மதிப்பீட்டிலும்,

202324 ஆம் நிதியாண்டில் 1,715 மாணாக்கர்களுக்கு ரூ.33.81 கோடி மதிப்பீட்டிலும் கல்வி கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து, நடப்பு நிதியாண்டில் 3,000 மாணாக்கர்களுக்கு கல்விக்கடன் உதவிகள் வழங்கிட தமிழக அரசால் ரூ.42 கோடி மதிப்பீட்டில் இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், மாவட்டத்தின் வட்ட அளவிலான 09 முகாம்களும், மாவட்ட அளிவலான 03 முகாம்களும் நடத்தப்பட்டு, டிசம்பர் 2024 வரை 1,766 மாணாக்கர்களுக்கு ரூ.28.24 கோடி மதிப்பீட்டிலான கல்விக்கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இம்முகாமினைப் போன்று, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கல்லூரி மாணாக்கர்களுக்கு பயனுள்ள வகையில் முகாம்கள் நடத்தி, கல்விக்கடனுதவிகள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், கல்வி கடன் பெற்றுள்ள மாணாக்கர்கள், இதனை சிறந்த முறையில் பயன்படுத்திக்கொண்டு, வங்கிக்கடன்களை சரிவர செலுத்தி, சிறப்பாக பயின்று, தங்களது வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் தெரிவித்தார்.

இம்முகாமில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் எஸ்.பிரவீன் குமார், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன், சிவகங்கை நகர்மன்ற துணைத்தலைவர் கார்கண்ணன் மற்றும் அனைத்து வங்கியாளர்கள், மாணவ மாணவியர்கள் மற்றும் மாணாக்கர்களின் பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திருத்தேர்வளை பகுதியில் சாலையோரம் உள்ள மரக்கிளைகள் தாழ்வாக செல்லும் மின் கம்பிகளை சீர்செய்ய சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

ஆனந்தூர் . மார்ச்.13

ராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் தாலுகா ஆனந்தூர் அருகே உள்ள திருத்தேர் வளை ஊராட்சி திருத்தேர்வளை மேலக்கோட்டை வழிக திருவாடானையில் இருந்து ஆனந்தூர் பேருந்து நிலையத்திற்கு திருத்தேர்வளை ஊராட்சி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று அரசு பேருந்து இயக்கப்பட்டது .இந்த பேருந்து திருவாடானையில் இருந்து திருத்தேர்வளை மேலக்கோட்டை, திருத் தேர்வளை ஆதி திராவிடர் நல காலணி மற்றும் கப்பகுடி வழியாக ஆனந்தூர் சென்று வந்த நிலையில் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக உரிய வழித்தடத்தில் பேருந்து செல்லாமல் மாற்று வழித்தடத்தில் சென்றதை அறிந்த அப்பகுதியினர் ஓட்டுநர் , நடத்துனரிடம்



கேட்டபோது உங்களது பகுதியில் பேருந்து செல்லும் வழித்தடங்களில் மரக்கிளைகள் சாலையின் குறுக்கே தாழ்வாக செல்லும் மின் கம்பிகள் மற்றும் சாலையில் கட்டுப்பட்டு வருகின்ற கால்நடைகளால் பேருந்து செல்ல இடையூறாக உள்ளது இதனால் பேருந்தை சீராக இயக்க முடியவில்லை என்றனர் .இது குறித்து கிராம சபை கூட்டங்களில் அதிகாரிகளிடம் கூறியும் இந்த நாள் வரை எந்த பயனும் இல்லை என்பதால் பயணிகள் மற்றும் கிராம மக்கள் மிகுந்த அளவில் சிரமம் அடைத்து வருகின்றன எனவே மாவட்ட நிர்வாகம் சீரான முறையில் அரசு பேருந்து தடையின்றி வந்து செல்ல சாலையோரங்களில் உள்ள மரக்கிளைகள் மற்றும் சாலையின் குறுக்கே தாழ்வாக செல்லும் மின் கம்பிகள் சாலையில் காணப்படும் குழிகளை சீர் செய்து சாலையில் கால்நடைகளை கட்டுவோர் மீது போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் மற்றும் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காத்து இருந்து பார்ப்போம். அரசு பேருந்து சீரான முறையில் உரிய வழித்தடத்தில் வந்து செல்ல வழித்தடங்களை சீர் செய்ய மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா???



செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் அடுத்த நெடுங்குன்றம் ஊராட்சியில் உள்ள கிங் ஆப் நெடுங்குன்றம் கிரிக்கெட் சார்பில் அம்பேத்கர் பிறந்த நாள் முன்னிட்டு கிரிக்கெட் விளையாட்டு போட்டி வண்டலூர் கேளம்பாக்கம் சாலையில் உள்ள விளையாட்டு திடலில் நடைபெற்றது இதில் வெற்றி பெற்ற அணிக்கு பாஜக பட்டியலியின மாநில செயலாளர் ஒருங்கிணைந்த மனிதநேய அம்பேத்கர் கூட்டமைப்பு நிறுவன தலைவர் நெடுங்குன்றம் ஆர்.கே.சூர்யா, செங்கல்பட்டு வடக்கு மாவட்ட பாஜக விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டு பிரிவு தலைவர் எஸ் கே எஸ் சக்திவேல் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கோப்பை வழங்கினார்..



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகே உள்ள திருக்கோஷ்டியூர் தெப்பத் திருவிழாவிற்கு ஏராளமான பெண்கள் கோவிலுக்கு செல்வதால் போதிய அளவில் பேருந்து இயக்கப்படாததால் மானாமதுரை புதிய பேருந்து நிலையத்தில் இருந்து தினசரி பள்ளி கல்லூரி செல்லும் மாணவர்கள் அவதி அடைந்தனர்.

## தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் ஸ்ரீ வடக்கத்தி மாரியம்மன் மஹா கும்பாபிஷேகம் விழா! பக்தர்கள் தரிசனம்





தேனி .மார்ச் 13

தேனி மாவட்டம் போடி நாயக்கனூர் 13 வது வார்டு முனிசிபல் காலனியில் அருள் பாலித்துவரும் இந்து குறிஞ்சியர் (எ) குறவன் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட அருள்மிகு ஸ்ரீ வடக்கத்தி மாரியம்மன் கோவிலின் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் 1203 2025 புதன்கிழமை காலை 9 மணிக்கு மேல் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து சிறப்பு அபிஷேகமும், பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

கும்பாபிஷேகம் விழாவினை முன்னின்று நடத்தி வைத்தவர் திருப்பணி வித்தகர் எஜமான் ஸ்ரீ பாண்டி முனீஸ்வரர் மற்றும் போடிநாயக்கனூர் சட்டமன்ற உறுப்பினர் ஓ. பன்னீர்செல்வம், . திருப்பதி மீனாட்சிபுரம் பேரூராட்சி சேர்மன் ஆகியோர்களின் தலைமையிலும் .பழனிராஜ், முன்னாள் போடி நகர் மன்ற தலைவர் முன்னிலையிலும் நடைபெற்றது. போடி குறிஞ்சியர் சமுதாயத் தலைவர் .முருகன், தங்கவேல் மற்றும் கோயில் நிர்வாகஸ்தர்கள் கருப்பையா, குமார் முத்துராஜா பாபு ஈஸ்வரன் வேல்முருகன் மற்றும் அப்பகுதி பக்தர்களும் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டு அம்மனின் திருவருளை பெற்று சென்றனர்.

## திருப்பூர் நெடுஞ்சாலைத்துறை, தெற்கு பகுதியில் பராமரிப்பு பணிகளை கோட்ட பொறியாளர்-உதவி கோட்ட பொறியாளர் ஆய்வு



திருப்பூர் மார்ச் 13

திருப்பூர் மற்றும் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு திருப்பூர் தெற்கு கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வேலைகளை உதவி கோட்ட பொறியாளர் சுரேஷ் மற்றும் உதவி பொறியாளர் ரமேஷ் கிஷோர் இவர்களது நேரடி பார்வையில் சாலைகள் பராமரிப்பு பணிகள் மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது குறிப்பாக சாலையில் உள்ள நொடிகளை அனைத்தையும் சரி செய்யப்பட்ட நிலையில் தற்போது சாலைகள் இருபுறமும் முள் புதர்கள் அகற்றும் பணிகளையும் மரங்கள் மின் கம்பங்கள் இவைகளுக்கு கருப்பு வெள்ளை நிறம் சாயம் பூசப்பட்டது. சாலையில் அமைந்துள்ள வாகன ஓட்டுனர்களும் மக்களும் கிலோமீட்டர்களை அறிந்து கொள்ளும் வகையில் மைல் கல்களுக்கு வர்ணம் பூசுதல் போன்ற பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது மேலும் கோயில் வழி காரப்பாளையம் சாலையில் உயரமாக உள்ள மண் திடல்களை சரிசமம் செய்யப்பட்டு மக்கள் பாதுகாப்பாக இடது புறம் நடந்து செல்ல ஏற்ற வகையில் சரிசமம் செய்யப்பட்டது மேலும் இப்பணிகள் அனைத்தும் இம்மாதம் இறுதிக்குள் வேலைகளை செய்து முடிக்கப்படும் என கூறினர். அப்பகுதி மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் நன்றி தெரிவித்தனர்.

## காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக கலை பண்பாட்டு மையம் நடத்திய மாணவர்களுக்கான திறமை வெளிப்பாட்டு நிகழ்ச்சி




காரைக்குடி மார்ச் 13

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகராட்சி அழகப்பா பல்கலைக்கழகத்தில் கடந்த மார்ச் 6 ஆம் தேதி முதல் மார்ச் 8 ஆம் தேதி வரை பல்கலைகழகத்தின் கலை பண்பாட்டு மையம் நடத்திய மாணவர்களுக்கான திறமை வெளிப்பாட்டு நிகழ்ச்சி (Alagappa University Talent Exhibit Show- ALUTES) நடைபெற்றது. கோலாகலமாக அரங்கேறிய இந்த நிகழ்வை பல்கலைகழகத்தின் துணை வேந்தர் கர்னல். க. ரவி குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார், சிறப்பு விருந்தினராக வந்த பின்னணி பாடகி பத்மஸ்ரீ சின்ன பொண்ணு குமார் சிறப்புரையாற்றினார்.

இதனை தொடர்ந்து மூன்று நாட்கள் அழகப்பா பல்கலைக் கழகத்தில் பல்வேறு போட்டி களும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இவற்றில் கலந்து கொண்டு மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிகாட்டினர். நிகழ்வின் நிறைவு விழா மார்ச் 8 ல் நடைபெற்றது. இந்த நிகழ்வினை கலை பண்பாட்டு மைய துணை ஒருங்கிணைப்பாளர் முனைவர். ஞா.சிவகுமார் வரவேற்புரை வழங்கினார் அதனைத் தொடர்ந்து வெற்றி பெற்றவர்களை கலை பண்பாட்டு மைய ஒருங்கிணைப்பாளர் முனைவர் க. இலங்கேஸ்வரன் அறிவித்தார் பின்னர் பல்கலைகழகத்தின் துணைவேந்தர், பதிவாளர், ஆட்சிமன்ற உறுப்பினர்கள், ஆசிரியர்கள், திரைப்பட நடிகர் கவிதா பாரதி மற்றும் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் ஷி.மாங்குடி ஆகியோர் கலந்துகொண்டனர். இதில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு துணைவேந்தர் கர்னல். க .ரவி மற்றும் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற திரைப்பட நடிகர் கவிதா பாரதி ஆகியோர் பரிசுகள் வழங்கி ஊக்குவித்தனர்.

## மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கொடுக்கப்படும் மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்! தேனி மாவட்ட கலெக்டர் உத்தரவு:




தேனி.மார்ச்.13

தேனியில் நடந்த குறைதீர் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் தலா ரூ.16,199/ மதிப்பிலான ஸ்மார்ட் போன்களை 7 நபர்களுக்கு கலெக்டர் வழங்கினார்.மேலும், பொதுமக்கள் கொடுக்கும் மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அலுவலர்களுக்கு தேனி கலெக்டர் உத்தரவிட்டார்.

தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத் திற்கு தலைமை வகித்து,230 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் பொதுமக்களிடமிருந்து பெற்றுக் கொண்டார். கூட்டத்தில் முதியோர் உதவித் தொகை,புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 230 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சியர் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந் தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

அதனைத் தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் தலா ரூ.16,199/ மதிப்பிலான ஸ்மார்ட் போன்களை 7 நபர்களுக்கு கலெக்டர் வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மகாலட்சுமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் முத்துமாதவன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் காமாட்சி மற்றும் பொதுமக்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பொதுமக்களிடம் இருந்து மனுக்களைப் பெற்றுக்கொண்டு நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தனர்.

## 24 மனை தெலுங்கு பட்டி செட்டியார் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ சாத்தவுராயன் சுவாமி திருக்கோவில் கும்பாபிஷேக விழா







தேனி.மார்ச் 13

தேனி மாவட்டம் போடி யிரி பட்டியில் 24 மனை தெலுங்கு செட்டியார் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட அருள்மிகு சாத்தாவுராயன் திருக்கோவிலின் மஹா கும்பாபிஷேக விழா இன்று வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. நடு இரவில் இருந்தே பல்வேறு யாகசாக பூஜைகள் நடத்தப்பட்டு பல்வேறு பூஜைகள் நடத்தப்பட்டது இன்று காலை இந்தியாவின் புனித நதிகளில் இருந்து கொண்டுவரப்பட்ட நன்னீரால் கலச கும்பங்கள் அபிஷேகம் ஆராதனை செய்யப்பட்டு பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்பட்டது. இந்த கும்பாபிஷேக விழாவில் தலைவர் .முருகன், செயலாளர் சரவணன், பொருளாளர் .பாஸ்கர் மற்றும் தேசிய செட்டியார் பேரவையின் தமிழ்நாடு மாநில தலைவர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சாத்தாவுராயனை வழிபட்டார். ஆயிரக்கணக்கில் கலந்து கொண்ட பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கோவில் நிர்வாகத்தின் சார்பாக அன்னதானமும் பிரசாதமும் வழங்கப்பட்டது.

## தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் பண்டிதமணி அறக்கட்டளைச் சொற்பொழிவு





தேவகோட்டை மார்ச் 13

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி தமிழ்த்துறையின் சார்பில் கல்லூரி நிறுவுநர் கல்வி வள்ளல் அண்ணாமலை செட்டியார் அவர்களால் நிறுவப்பெற்ற மகா மகோ பாத்தியாய பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கண்ணதாசன் வரவேற்றார். கல்லூரியின் இன்றைய பொறுப்பு முதல்வரும் பொருளியல் துறைத் தலைவருமான முனைவர் பரமசிவன் தொடங்கி வைத்தார். கல்லூரியின் ஆட்சிக்குழுத் தலைவர் அண.லெட்சுமணன் செட்டியார் தலைமையேற்றார். அவர்தம் தலைமையுரையில் பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் அவர்களுக்காக அறக்கட்டளை நமது தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் இன்று 27ஆம் ஆண்டு சிறப்புடன் நடத்தப்பெற்று வருவதாகக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ஆடிட்டர் சிவராமன் இராமநாதன் 'திருவாசகத்தைத் தெளிந்தால்' என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். அவர்தம் சிறப்புரையில் திருவாசகம் இறைவனை அடையும் வழியைச் சிறப்பாக எடுத்துரைக்கும் நூல். மாணிக்கவாசகப் பெருமான் உலக வாழ்வில் பதவி பணம் அதிகாரம் அனைத்தும் துன்பத்தைத் தருவதாகவும் அவற்றை நீக்கி பற்றில்லாமல் வாழ்ந்தால் அதுவே இன்பமயம் என்றும் விளக்குகிறார் இதனையே திருவாசகம் கூறுகின்றது என்றும் மேலும் அவர் வயதானவர்கள் மட்டும் முக்தி அடைவதற்குப் படிக்கக் கூடிய நூல் திருவாசகம் அல்ல இளைய தலைமுறையினரும் தங்கள் வாழ்வை நெறிப்படுத்திக் கொள்ள வாசிக்க வேண்டியது திருவாசகம் எனக் கூறினார்.

விழாவின் நிறைவில் இந்த அறக்கட்டளையின் ஒருங்கிணைப்பாளர் உதவிப் பேராசிரியர் முனைவர் ரெத்தினேஸ்வரி நன்றி கூறினார். விழாவில் கல்லூரியின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ஆறுமுகம், சிந்தனைச் சோலை செயலர் தமிழ்ச்செல்வன் ஆசிரியர் மற்றும் கல்லூரியின் பேராசிரியர்கள், அலுவலர்கள், பல்துறை மாணவர்கள் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். விழாவைத் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இளங்கோ தொகுத்து வழங்கினார்.

# உத்தமபாளையம் காளாத்தீஸ்வரர் ஞானாம்பிகை கோயில் மாசி மகத் தேரோட்டம்



தேனி, மார்ச்.13

தேனி மாவட்டம், உத்தம பாளையம் காளாத்தீஸ்வரர் ஞானாம்பிகை கோயில் மாசி மக தேரோட்டத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்தார்கள்.

தேனி மாவட்டம், உத்தம பாளையம் காளாத்தீஸ்வரர் ஞானாம்பிகை கோயில் மாசிமக தேரோட்டம் சில ஆண்டுகளாக நடைபெறவில்லை.

இந்தாண்டு மாசி மக தேரோட்டம் நடத்த ஹிந்து அறநிலைய துறை அதிகாரிகள், பொதுமக்களும் முடிவு செய்தனர். அதன்படி மார்ச் முதல் தேதியில் கொடியேற்றமும், அதனைத் தொடர்ந்து அனைத்து சமூகத்தினரின் மண்டகப்படி நடைபெறும். மார்ச் 12 ல் தேராட்டம் நடைபெறுகிறது.

கோயில் செயல் அலுவலர் இளஞ்செழியன் பணி ஓய்வு பெற்று சென்ற பிறகு, இக் கோயிலுக்கு செயல் அலுவலர் நியமிக்கவில்லை. ஆண்டிபட்டி செயல் அலுவலர், கம்பம் செயல் அலுவலர் என பலர் பொறுப்பில் இருந்தனர். தற்போது பெரியகுளம் பாலசுப்ரமணியர் கோயில் செயல் அலுவலர் சுந்தரி, செயல் அலுவலர் ஜெயராமன் கூடுதல் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த விழாவில் கம்பம் சட்டமன்ற உறுப்பினர் ராமகிருஷ்ணன் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்தார். இதில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டு தேரை வடம் பிடித்தார்கள்.

# சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க இளைஞர் அணி சார்பில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் 72 வது பிறந்தநாள் விழா



சித்தாலப்பாக்கம் மார்ச் 13

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட சித்தாலப்பாக்கத்தில் தி.மு.க இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திராவிட முன்னேற்ற கழகக் கொடியை ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி, 2000ற்கும் மேற்பட்டோருக்கு நலத்திட்ட உதவிகள் சில்வர் குடங்கள், மாற்றுத்திறனாளிக்கு ஜுபிடர் ஸ்கூட்டி வழங்கி பிறந்த நாளை விழாவை மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர், சித்தாலப்பாக்கம். ஜே. இ. பாண்டியன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. சித்தாலப்பாக்கம், சமூக நலக்கூடம் அருகில் நடைபெற்ற விழாவில்

மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்த்து துறை அமைச்சருமான மா.சுபிரமணியன், கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநிலச் செயலாளர், தொழில்துறை அமைச்சரமான டி. ஆர். பி. ராஜா, சிறப்புரையாற்றினார்கள். தொடர்ந்து சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். அரவிந்த் ரமேஷ் முன்னிலையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், விருகை சட்டமன்ற உறுப்பினருமான.ஏ.வி.எம். பிரபாகரராஜா, புனித தோமையார் மலை தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர், கோவிலம்பாக்கம். ஜி. வெங்கடேசன் மற்றும் நடுவர்: விஜய் டிவி புகழ் பேராசிரியர் பழனி, பெரியார் அண்ணா புரட்சியே!, அணி கோவை, தனபால் நீலவேணி முத்தமிறிஞரின் எழுச்சியே! அறந்தாங்கி நிஷா, பேராசிரியர் சங்கீதா பாட்டு பட்டிமன்றத்தை கொட்டும் மழையில் பொதுமக்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. விழாவில் மாவட்ட, வட்ட, பகுதி ,ஊராட்சி, ஒன்றிய, கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு ஊராட்சி செயலாளர்கள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம்




தேனி மார்ச்.13

தமிழ்நாடு ஊராட்சி செயலாளர்கள் சங்கம் சார்பில் முறையான காலமுறை ஊதியம் பெற்று வரும் ஊராட்சி செயலாளர்களை தமிழக அரசின் ஓய்வூதிய திட்டத்தில் சேர்க்க கோரியும், அனைத்து ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் பதிவறை எழுத்தர்களுக்கு உண்டான அரசின் அனைத்து சலுகைகளை விரிவுபடுத்தி அரசாணையை உடனடியாக வெளியிட வேண்டும் என முதற்கட்டமாக மாநில முழுவதும் மாவட்ட தலைநகர்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அந்த வகையில் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவக நுழைவு வாயில் முன்பு மாவட்ட தலைவர் பாலமுருகன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பன்னீர் செல்வம் வரவேற்று பேசினார். மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் ரதவேல் , சாகுல் ஹமீது , தமிழ்நாடு ஊராட்சி செயலாளர்கள் சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தின் முடிவில் மாவட்ட பொருளாளர் பன்னீர்செல்வம் நன்றி கூறினார். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சங்கத்தை சேர்ந்த ஊராட்சி செயலாளர்கள் இன்று ஒரு நாள் தற்செயல் விடுப்பு எடுத்து ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## டெல்டா பிராந்தியத்தில் முதன்முறையாக

# இம்பெல்லா இதய பம்பின் உதவியுடன் ஆஞ்சியோபிளாஸ்டி சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொண்ட தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனை



தஞ்சாவூர், மார்ச் 13

தமிழ்நாட்டில் சென்னை மற்றும் மதுரை மாநகரங்களுக்கு வெளியே, இம்பெல்லா மெக்கானிக்கல் இதய பம்ப் உதவியுடன் ஆஞ்சியோபிளாஸ்டி சிகிச்சை செயல்முறையை மேற்கொண்டிருக்கும் முதல் மருத்துவமனை என்ற பெருமையை மீனாட்சி மருத்துவமனை தஞ்சாவூர் பெறுகிறது. காவிரி டெல்டா பிராந்தியத்தில், உலகின் மிகச்சிறிய இதய பம்ப் உதவியோடு இம்மருத்துவச் செயல்முறையை வெற்றிகரமாக மீனாட்சி மருத்துவமனை நிகழ்த்தியது குறிப்பிடத்தக்கது. சிகிச்சை செயல்முறை நெடுகிலும் நோயாளிக்கு தற்காலிக இரத்தச் சுழற்சி ஆதரவை இம்பெல்லா கருவி வழங்கியபோது, கடுமையான இதய செயலிழப்பால் அவதிப்பட்ட ஒரு நோயாளிக்கு கால்சியம் படிமங்களை அகற்றி மூன்று ஸ்டென்ட்களை பொருத்தும் பணியை மருத்துவ நிபுணர்கள் வெற்றிகரமாக செய்திருக்கின்றனர்.

இதயவியல் துறையின் தலைவரும் மற்றும் முதுநிலை சிறப்பு நிபுணருமான டாக்டர். கேசவமூர்த்தி தலைமையிலான மருத்துவர் குழுவில் இதயவியல் சிறப்பு மருத்துவர் டாக்டர். றி. சபரிகிருஷ்ணன், இதயவியல் துறையின் முதுநிலை சிறப்பு மருத்துவர் டாக்டர். கி. ஸ்ரீனிவாசன் மற்றும் இதயம் சார்ந்த மயக்கமருந்தியல் துறை நிபுணர் டாக்டர். சென்ன கேசவலு ஆகியோர் இடம்பெற்று சிறப்பான பங்களிப்பை வழங்கினர்.

தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையின் இதயவியல் துறையின் தலைவரும் மற்றும் முதுநிலை சிறப்பு நிபுணருமான டாக்டர். ஙி. கேசவமூர்த்தி இச்சிகிச்சை குறித்து கூறியதாவது: "இதய சிகிச்சை செயல்முறையின் பாதுகாப்பையும், விளைவுகளையும் கணிசமாக மேம்படுத்தக்கூடிய இம்பெல்லா போன்ற மிக நவீன தொழில்நுட்பத்தை டெல்டா பிராந்தியத்தில் அறிமுகம் செய்வதில் நாங்கள் மகிழ்ச்சியும், பெருமிதமும் கொள்கிறோம். தமனியில் கடுமையான அடைப்புகள் அல்லது அளவுக்கதிகமாக கால்சிய படிமங்கள் போன்ற காரணிகளினால் நோயாளியின் இதயம் மிகவும் பலவீனமாக இருக்கும் நேர்வுகளில் இதயம் செயல்பாட்டை நிறுத்திவிடக்கூடும்; இதன் மூலம் உயிரிழப்பு போன்ற கடுமையான விளைவுகள் ஏற்படலாம். சிக்கலான ஆஞ்சியோபிளாஸ்டி செயல்முறைகள் கூட இதயத்தின் மீது அதிக அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடும். . சிகிச்சை செயல்முறையின்போது இதயம் ஓய்வெடுக்க இது அனுமதிக்கிறது. அவசியமாக இருக்குமானால், சிகிச்சை செயல்முறைக்கு பிறகு ஏழு நாட்கள் வரை இந்த பம்ப் இதயத்திற்கு ஆதரவளிப்பதை தொடரக்கூடும்".

தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையின் இதயவியல் துறையின் சிறப்பு நிபுணரான டாக்டர். றி. சபரிகிருஷ்ணன் பேசுகையில், "தமனியில் அடைப்புகளுக்கு சிகிச்சையளிக்க பயன்படுத்தும் பாரம்பரியமான அணுகுமுறையில் தமனி சுவருக்கு எதிராக கால்சிய படிமங்களை அழுத்தி சுருங்குவதற்கு ஒரு சிறிய பலூன் பயன்படுத்தப்படும் மற்றும் இதயத்தசைக்கு இரத்த ஓட்டத்தை மேம்படுத்துவதற்கும் மற்றும் இரத்தநாளத்தை திறந்த நிலையில் வைப்பதற்கும் ஒரு ஸ்டென்ட் பொருத்தப்படும். எனினும் இதய செயல்பாடு மோசமாக இருக்கிற நோயாளிகளில் சிகிச்சை செயல்முறையின்போது இதயம் செயல்படுவது நின்று விடக்கூடும். இந்த பாரம்பரிய அணுகுமுறைக்கு மாறாக இடது இதயக்கீழறையிலிருந்து இரத்தத்தை பெருந்தமனிக்கு இரத்தத்தை பம்ப் செய்வதன் மூலம் இம்பெல்லா கருவி இதயத்திற்கு தீவிர ஆதரவளிக்கிறது. . உடலின் பெரிய தமனி/குருதிக்குழாய் வழியாக இக்கருவி உட்செலுத்தப்பட்டு இதயத்தின் இடது கீழறைக்கு கொண்டு செல்லப்படும். வழக்கமாக காலில் தொடைத் தமனி வழியாக இது மேற்கொள்ளப்படுகிறது" என்று விளக்கமளித்தார்.

குறிப்பாக நீரிழிவு, இதயச் செயலிழப்பு, முதிர்ந்த வயது, கடுமையான பம்ப் செயலிழப்பு, சிக்கலான உறுப்புக் கோளாறுகள், அல்லது இதற்கு முன்னதாக பைபாஸ் அறுவைசிகிச்சைகள் செய்திருக்கும் வரலாறு போன்ற கூடுதல் இடர்காரணிகள் இருக்கும் நோயாளிகளுக்கு இம்பெல்லா பம்ப்ஐ பயன்படுத்துவது சிறந்தது.



மதுரை மாநகராட்சி மண்டலம் 5 வார்டு எண்.94 திருநகர் பகுதியில் புதிய அறிவியல் பூங்கா அமைப்பதற்கான பூமி பூஜை மேயர் இந்திராணி பொன்வசந்த் தலைமையில் நடைபெற்றது அருகில் மண்டலத் தலைவர் சுவிதா , மாமன்ற உறுப்பினர்கள் ஸ்வேதா ,சிவா மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



# அலங்காநல்லூரில் மாற்றுத் திறனாளிகள் சங்க நிர்வாகிகள் காத்திருப்பு போராட்டம்




அலங்காநல்லூர் மார்ச் 13

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஒன்றிய அலுவலகம் முன்பு தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்பு உரிமைகளுக்கான சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் காத்திருப்பு போராட்டம் மேற்கொண்டனர். இந்த ஆர்ப்பாட்டம் தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்பு உரிமைகள் நல சங்கம் மாவட்ட செயலாளர் தவமணி தலைமையில் சி பி ஐ எம் மாவட்ட குழு உறுப்பினர் உமா மகேஸ்வரன் மற்றும் சங்க நிர்வாகிகள் பாண்டி ஆறுமுகம் சௌந்தரராஜன் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

# நாள்பட்ட சிறுநீரக நோய் பாதிப்பை கண்டறிவது முக்கியம்! மீனாட்சி மிஷன் மருத்துவமனை மருத்துவர்கள் அறிவுறுத்தல்



மதுரை, மார்ச் 12,

கிராமப்புறங்களில் வசிக்கும் விவசாய சமூகங்களை பெரும்பாலும் பாதிக்கும் ஒரு நோயான, காரணம் அறியப்படாத நாள்பட்ட சிறுநீரக நோயை புரிந்து கொள்வதற்கும், ஆரம்ப நிலையிலேயே அறிகுறிகளை கண்டறிவதை ஏதுவாக்க கிராம அடிப்படையில் திறன்மிக்க அடிப்படை சோதனை மற்றும் ஆராய்ச்சிக்கான அவசரத் தேவை இருப்பதை தென்தமிழ்நாட்டின் முன்னணி பன்முக சிறப்பு மருத்துவமனையான மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் சிறுநீரக ஆரோக்கிய சிறப்பு மருத்துவ நிபுணர்கள் அழுத்தம் திருத்தமாக சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 13 அன்று அனுசரிக்கப்படும் உலக சிறுநீரக தினத்தையொட்டி செய்தியாளர்கள் சந்திப்பு நிகழ்வை இம்மருத்துவமனை ஏற்பாடு செய்திருந்தது. சிறுநீரகவியல் துறையின் தலைவர் மற்றும் முதுநிலை நிபுணர் டாக்டர். ரி. சம்பத்குமார், சிறுநீரகப்பாதையியல் துறையின் தலைவர் மற்றும் முதுநிலை நிபுணர் டாக்டர். ரவிச்சந்திரன் மற்றும் மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சிமையத்தின் மருத்துவ நிர்வாகி டாக்டர். கண்ணன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு இது குறித்த தகவல்களையும், தரவுகளையும் பகிர்ந்து கொண்டனர்.

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் சிறுநீரகவியல் துறையின் தலைவர் மற்றும் முதுநிலை நிபுணர் டாக்டர். ரி. சம்பத்குமார் கூறியதாவது: "காரணம் உறுதியாக அறியப்படாத நாள்பட்ட சிறுநீரக நோயை எதிர்த்து போரிட பல்வேறு முயற்சிகளின் ஒருங்கிணைந்த நடவடிக்கை அத்தியாவசியமாக தேவைப்படுகிறது: குடிநீர் மற்றும் துப்புரவு நிலையை மேம்படுத்துவது, தொழில்/பணி சார்ந்த ஆபத்துகள் குறித்து கற்பிப்பது, ஆரம்ப அறிகுறியை அடையாளம் காண்பதை ஊக்குவிப்பது மற்றும் கிராம சுகாதார செயல்திட்டங்களில் எளிதில் அணுகிப்பெறக்கூடிய ஸ்கிரீனிங் (அடிப்படை சோதனை) செயல்பாட்டை ஒருங்கிணைப்பது ஆகியவை இந்த சமூகங்களுக்குள் காணப்படுகிற குறிப்பிட்ட இடர்காரணிகளை அடையாளம் காண்பதற்கு இலக்கு கொண்ட ஆராய்ச்சி அவசியமாகும்; அத்தகைய ஆராய்ச்சியை மேற்கொள்ளாமல் சிறுநீரக ஆரோக்கியத்தை பாதுகாப்பதற்கு தேவைப்படுகிற பயனளிக்கும் நடவடிக்கைகளை நம்மால் உருவாக்க இயலாது".

நீரிழிவு நோயாளிகள், அவர்களின் HbA1c அளவை 7% குறைவாக வைத்திருக்க வேண்டும். உயர் இரத்த அழுத்தமுள்ள நபர்கள், அவர்களது இரத்த அழுத்தத்தை 130/80க்குள் வைத்திருப்பதை தங்களது இலக்காக கொண்டிருக்க வேண்டும். புகைபிடிப்பதையும், அளவுக்கதிகமாக மதுபானம் அருந்துவதையும் தவிர்ப்பது சம அளவு முக்கியத்துவம் வாய்ந்தவை. ஏனெனில், சிறுநீரகம் சேதம் அடைவதற்கு இந்த தவறான பழக்கங்கள் பங்களிப்பு செய்யக்கூடியவை. கூடுதலாக, குறைந்தது ஏழு மணி நேரம் நன்கு உறங்குவதும், மற்றும் முறையான ஓய்வு எடுப்பதும் இதயம் மற்றும் சிறுநீரகம் ஆகிய இரு முக்கிய உறுப்புகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்" என்று குறிப்பிட்டார்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161